
# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



மலர் 6 இதழ் 4

கௌரவ ஆசிரியர்

மு. க. சுப்பிரமணியம்

15-8-68 30 சதம்

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் வைரங்களுக்கும் ★
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
# கே.என்.எம்.மீரான் சாஹிப்
''தங்கப்பவுண் நகை மாளிகை''
கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*
## K. N. M. MEERAN SAHIB
JEWELLERS & DIAMOND MERCHANT
"SOVEREIGN PALACE"
**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

## தமிழக நேயர்களுக்கு!


**வெற்றிமணி மாதந்தோறும் தமிழகத்திற்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

இந்தியாவிலுள்ள நேயர்கள் வெற்றிமணிக்குரிய சந்தா, மாணவர் மன்றம், பேனா நண்பர் சங்கம் இவற்றிற்குரிய தொகைகளை

கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

தமிழக விற்பனையாளர்களும், விளம்பரதாரர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

**கா. தமிழ்த்தம்பி**
விஜயா பிரேம் ஒர்க்ஸ்,
பெரிய கடை வீதி - பழநி,
மதுரை மாவட்டம்.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 3-50 |
| இந்தியா | ரூபா. | 3-50 |
| மலாயா | $ | 3-50 |

தாற்செலவுட்பட

தனிப்பிரதி தபாலில் பெற விரும்பினல் 35 சத முத்திரையனுப்ப வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்யின் 15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
அம்மாவுக்குக் கடிதம் ... ... 4
சிறுவர் சித்திரத்தில் வண்ணங் ... 7
இலங்கையின் நீர்ப்பாசனத் திட்டங்கள் ... 9
புவி பொதுவிபரம் ... 10
சுயஉதவி ... ... ... ... 12
கணக்கியலுக்கோர் அறிமுகம் ... 13
ஒற்றுமைப் புலவர் ... ... ... 17
துரோகம் ... ... ... ... ... 19
மதனும் மாயமோதிரமும் ... 21
கவிதை அரங்கம் ... ... ... 25
உங்களுக்குத் தெரியுமா? ... 27
குட்டுரைப் போட்டி ... ... 28
ஈழத்துச் சிறுகதை நூல்கள் ... 29
போட்டி விதிகள் ... ... ... 30
அறிவுப் போட்டி ... ... ... 31
வெற்றிமணி மாணவர்மன்றம் .. 32

# — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 6. | வியாழக்கிழமை 15-8-68 | இதழ் 4 |
|---|---|---|

## பொது அறிவு

மாணவர்களுக்கு விடுமுறை காலம் இது. இரண்டாந் தவணைத் தேர்வில் நன்றாகச் செய்த பிள்ளைகளின் பெற்றோர் மகிழ்வுறுதலும், குறைவாகச் செய்த பிள்ளைகளின் பெற்றோர் கவலை கொள்ளலும் இயல்பே. பரீட்சையை மையமாக வைத்துக்கொண்டு படிப்பு நடைபெறுவதால் பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்மீதும் பெற்றோர்கள்மீதும் அதிகதாக்கத்தை ஏற்படுத்துகின்றன. படிப்பு என்றால் பரீட்சைக்குப் பயிற்றுவித்தல் என்றாகிவிட்டது இதனால் மாணவர்கள் பாட நூல்களைவிட்டுப் பிற நூல்களைத் தொட்டுப்பார்க்கவும் நேரமின்றி அவ்வப் பாடங்களுக்குப் பயன்படுத்தப்படும் பாட புத்தகங்களுடன் சாகின்றனர். இதன் விளைவாகப் பொதுஅறிவு என்பது மாணவர்களிடத்திற் பூச்சியமாகிவிட்டது. க. பொ. த. மாணவர்கள் பலருக்குத் தமிழ்க் காப்பியங்களின் பெயர்களே தெரிவதில்லை. இது தான் இன்றைய நிலை சுருக்கமாக.

உபபாடபுத்தகங்களையும் பிற பொதுஅறிவுக்கு உகந்த நூல்களையும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து அவற்றைப் படிக்கும்வண்ணம் ஊக்குவித்தலும் வேண்டும். கல்லூரியில் இருக்கும் நூல் நிலையங்களைப் பயன்படுத்தத் தூண்டல் வேண்டும்.

சஞ்சிகைகளையும் செய்தித் தாள்களையும் தவறாது படிக்கவேண்டும் என்கின்ற உணர்வு இக்கால மாணவர்களிடத்தில் குறைவாகவே காணப்படுகின்றது.

கல்வியை, சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், பாடத்துக்குத் தொடர்பான பிறநூல்கள் என்பவற்றுடன் தொடர்புபடுத்திப் புகட்டாத ஆசிரியர்களும் இந்நிலைக்குப் பொறுப்பாவர்.

தமிழில் பல உப பாடபுத்தகங்களை ஆங்கிலமூலம் கல்வி என்ற நிலை நிலவிய காலத்திலேயே ஈழகேசரி பொன்னையா அவர்கள் வெளியிட்டுள்ளனர்; இப்பொழுது அன்னாரது நிறுவகமான வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் வெளியிட்டு வருகின்றது. கொழும்பில் உள்ள அரசு வெளியீட்டினரும் மாணவர்களுக்கு ஏற்ற பல துணை நூல்களை இப்பொழுது வெளியிட்டு வருகின்றார்கள்.

கண்டவற்றைக் கற்க மாணவர்கள் பண்டிதராவார்கள். அந்நிலையில் பரீட்சை என்பது ஒரு பிரச்சினையாக இருக்க முடியாது.

# அம்மாவுக்குக் கடிதம்

இரசிகமணி கனக. செந்திநாதன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும் கட்டிலிலும் வைத்துக் காப்பாற்றி வளர்த்தவள் தாய். புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக் காலைப் பொழுதில் கல்வி படிக்கச் சென்றபோது அகமிக மகிழ்ந்தவள் தாய். ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாய்நின்று பரிசில் பெற்றுத் திரும்பும் போதெல்லாம் ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்து இன்புற்றவள் தாய். அதிகம் படிக்க வசதியற்ற குடும்பத்தில் பிறந்தும் படித்த படிப்பிற்கேற்ற ஒரு சிறு உத்தியோகம் பெற்றதும் நமக்கும் விடிவுகாலம் வந்து விட்டது என்று மகிழ்ச்சியின் எல்லையிலே உள்ளம் பூரித்தவள் தாய்.

நான் உத்தியோகம் பார்க்கக் கொழும்புக்கு வந்து சேர்ந்தேன். எவ்வளவோ கற்பனைக் கோட்டைகள் கட்டிக்கொண்டுதான் வந்து சேர்ந்தேன். என் தாய்க்கு - என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய்க்கு - என்னால் இயன்ற பணத்தை அனுப்பி அவளை மனமகிழ்ச்சியில் திளைக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் வந்து சேர்ந்தேன்.

ஆனால் அது முடிகிற காரியமாய் இல்லை. முதல் மாதச் சம்பளத்தை - தை மாதம் - எடுத்தேன். வீட்டு வாடகை, சாப்பாட்டுச் செலவு, காற்சட்டை சேட். இவை மாத்திரமா? 'சலூன்' செலவு, 'லோண்டரி'க்குப் பணம். அப்பப்பா! கற்பனைக் கோட்டைகளெல்லாம் தவிடு பொடியாகி விட்டன. தை மாதம் பல்லைக்கடித்து வயிற்றைச் சுருக்கி ஏதோ கொஞ்சப் பணம் அனுப்பி வைத்தேன். என் சங்கடமெல்லாம் அவளுக்கெங்கே தெரியப் போகிறது. நான் அனுப்பிய பணம் போதாது என்று அம்மாவிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. இம் மாதம் அனுப்புவதற்கு அது கூட இல்லையே! இந்த உத்தியோக லட்சணம் வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு ஏதோ

ஒரு மாதிரியாய்த் தெரிகிறது. உள்ளே எல்லாம் பீற்றல். இப்படியான 'கொழும்பு உத்தியோகத்தனை' ஒரு கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார். அந்த உத்தியோகத்தன் தன்னருமைத் தாய்க்கு எழுதிய கடிதத்தின் மூலம் காட்டுகிறார்.

''அம்மா நீ அருமையுடன் பெற்றுவிட்டாய்
அன்போடு கல்வியெல்லாம் ஊட்டிவைத்தாய்
சும்மா நான் இருப்பேனா! உங்கள்நன்றிச்
சுமைதாங்கி என்னுடலம் சோரும்போது
தைமாதம் பணம்அனுப்பப் 'போதாதென்று'
சாற்றிநீ எழுதிவிட்டாய்; மறக்கவில்லை
இம்மாதம் அதுவுமில்லை, என்ன செய்வேன்!
என்பணமாய் இங்கிருப்ப(து) இரு கண்நீரே''

''இம் மாதம் அதுவுமில்லை; என்ன செய்வேன்; என் பணமாய் இங்கிருப்பது இரு கண்நீரே!'' எனக் கவிஞர் முடிக்கும்போது ஆற்றாமையால் எழுந்த அன்பு அலறுவது துலாம்பரமாகத் தெரிகிறது. கண்ணீரில் தோய்த்து அவர் எழுதிய கடிதம் நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது. என்ன என் மகன் இப்படி எழுதுகிறானே. அப்படி என்ன செலவு வந்துவிடப்போகிறது? சாப்பாடு உடுப்பு இவைதவிர வேறென்ன செலவு? என்று நீ நினைப்பது எனக்குத் தெரிகிறது. சாப்பாடும் உடுப்பும் மாத்திரந்தானா? இதோ இந்தப் பட்டியலைப் பார்:-

''குணமான நண்பரது குறைக்காய் ஐந்து
கூட்ட மொன்றிற் குதர்க்கத்துக்காக ஐந்து
மணமான நண்பர்களுக் காகக் கொஞ்சம்
வருவிருந்தை மலர்த்துவதில் ரூபா கொஞ்சம்
கணநேரத் தவணைக்குக் காசு கேட்கும்
கனமான தோழர்களுக் காகக் கொஞ்சம்
திணறாமல் என் செய்வேன்! அம்மா இங்கு
செலவினங்கள் புதுப் புதிதாய்ச் சேரும்போது''

உத்தியோகம் வந்தவுடனே வரும் செலவுகளை கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார். ஊதாரித்தனமாகச் செலவு

செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ''நண்பரு டன் ஹோட்டல்களை நாடிச் சென்று நாலைந்து ரூபாய்க் குக் கணக்குவைக்க பண்பாடித் தெருவீதி யெல்லாம் சுற்றிப் படம்பார்த்துக் களித்திரவில் வீடுசேர கண் பார்க்கும் பொருட்கெல்லாம் காசுவீச காதலெனும் கடுஞ்சுழலில் கடிதுவீழ நினைப்பவர்கள் இல்லையா? இருக் கிறார்கள். ஆனால் நான்.........? உன் பாலன். நினைப்பேனா? அம்மா உள்ளத்து உன் உருவம் உன் துயரம் உறையும் போது'' என்று முடிக்கிறார் கவிஞர்.

கிராமத்திலிருந்து கொழும்புக்கு உத்தியோகத்துக் காகச் சென்று அல்லற்படும் ஒருவரது வாழ்க்கையை, ''சத்தியமாகச் சொல்லுகின்றேன், உண்மை அம்மா, சரி யான தூக்கமின்றித் தவிக்கின்றேனே'' என்று மனம் சாம்பும் வாழ்க்கையை அப்படியே பாடியிருப்பவர் யார் தெரியுமா? மகாஜனக் கல்லூரி ஆசிரியரும் பிரபல கவி ஞரும் பல கவியரங்கங்களிலே தம் புகழை நிலைநாட்டி யுள்ளவருமாகிய செ. கதிரேசர்பிள்ளை அவர்களே.

---

## அட்டைப் படம்

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் கன்னியர் மடத்துக்கு முன்பாக. நிறுவப்பட்டுள்ள இத் தண்ணீர்த் தாங்கியின் உயரம் 115 அடி யாகும். இத் தாங்கி 15 இலட்சம் கலன் தண்ணீர் கொள்ளக் கூடியது. தண்ணீர் கோண்டாவில், திருநெல்வேலிக் கிணறு களிலிருந்து பெறப்படுகின்றது.

# சிறுவர் சித்திரத்தில் வண்ணங்கள்

கலாகேசரி ஆ. தம்பித்துரை வடமாநில சித்திர வித்தியாதிகாரி

அறிவும், ஆராயுந்திறனும், கலையும், கலாச்சாரமும், நாகரீகமும், பண்பாடும் மனிதனுடைய வளர்ச்சியின் தூண்டுகோல்களாகவும், பெறு பேறுகளாகவும் விளங்குகின்றன. எனவேதான் மக்கள் அனைவரும் அனேக விஷயங்களை அனேக முறைகளில் தம்முள் பரிமாறிக் கொள்கின்றனர். ஆனால் சுவை நுகர்ச்சியைக் கலையின் மூலமாகத் தான் பரிமாற முடிகிறது.

கால வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்படாமல் வாழ்ந்துவரும் இலக்கியப் படைப்புக்களில் கருத்தை வெளியிடும் தனிமுறை ஒன்று இருக்கின்றது. இதுபோல கண் வழிச் சென்று உள்ளத்தை இன்புறச் செய்கின்ற ஓவியம், சிற்பம், நடனம் போன்ற அழகுக் கலைகளுக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தனி முறை ஒன்று உண்டு.

இயற்கையில் இருந்து பெறப்படும் அழகுணர்ச்சியாகிய முருகியலை மரபுக்கேற்ற பாணியில் தனது தனித்துவத்துடன் ஒன்று கலந்து கலைஞன் ஆனவன் ரேகை, ரூபம், வண்ணம் ஆகிய முப்பொருள்கள்மூலம் வெளியிடும் ஆற்றலே சித்திரம் எனப்படும். தனித்துவம் பிளிர மேற் கூறிய முப்பொருள்கள் மூலம் தங்கள் எண்ணங்களை வெளியிடும் ஆற்றல் குழந்தைகளிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. இந்த ஆற்றலை பிரகாசமான வண்ணங்கள் கொண்டு சுவை உணர்வு குன்றாது வெளியிடுவதில் பேரார்வம் எமது மூதாதையரில் இருந்து பெறப்பட்ட பரம்பரைப் பண்பு. அத் தொல்குடி மக்களது சித்திரங்களுக்கும் சிறுவர் சித்திரங்களுக்கும் உள்ள தொடர்பு நோக்கற்பாலது. கோடு நிறம் வடிவங்களைக் கொண்டு நுகரும் சுவை உணர்வை 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் பெரு நோக்கொடு சித்திரம் மூலம் வெளியிடும் சிறுர்கள் பிரகாசமான வண்ணங்களையே விரும்புவார்கள். இத்தகைய வண்ணங்கள் குழந்தைகளை இலகுவில் உணர்ச்சிப் பெருக்குள்ளன வாக்குகின்றன. அவர்கள் வண்ணங்களை உபயோகிக்க ஆரம்பித்த

துமே அவர்களது வெவ்வேறு விதமான மனநிலைகள் சித்திரங்கள் மூலம் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு பிள்ளை கறுப்பு, கரிய நிறம், கருநீலம் போன்ற இருண்ட நிறங்களை உபயோகிக்குமேயாகில் அதனது சூழ்நிலை ஒருவிதமான மந்தநிலையில் அமைந்துள்ளது என ஊகிக்கலாம். அவற்றை அழித்து அழித்துத் தீட்டுமேயாயின் அவை குழப்ப நிலையை உணர்த்துவதைக் காணலாம். பிரகாசமான நிறங்களை ஒரு குழந்தை தீட்டுமெனில் அவை அதனது மகிழ்ச்சி காரணமான தன்மையைக் குறிப்பிடும். இதேபோல தங்களது பல விதமான மன நிலைகளையும் வண்ணங்கள் மூலம் வெளியிடும் சிறுவர்களின் வண்ண அநுபவத்தை விருத்தி செய்வதற்கு மூல வண்ணங்கள் ஆகிய சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன போதுமானவை. சிவப்பையும் மஞ்சளையும் கலப்பதினுல் பெறப்படும் ஒறேஞ், சிவப்பையும் நீலத்தையும் கலப்பதினுல் உண்டாகும் ஊதா, மஞ்சள் நீலம் ஆகியன கலக்கப்படுவதினுல் ஏற்படும் பச்சை ஆகிய நிறங்களைக் கண்டு குழந்தைகள் வண்ணங்களை உபயோகிப்பதில் உற்சாகம் எய்துவார்கள். இதேபோல கறுப்பு, வெள்ளை வண்ணங்களை மற்றைய நிறங்களுடன் சேர்த்துப் பெறப்படும் சாயல்களைக் கண்டும் சிறுர்கள் மகிழ்வார்கள்.

எனவே அவர்களது அழகியல் உணர்ச்சியை வண்ணச் சுவையுணர்வு குன்ருது சித்திரங்கள் மூலம் வெளியிடுவதற்கு பலவிதமான வண்ணங்களையும் அளித்துச் சுதந்திரமாகச் சித்திரம் தீட்டச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தை நமது குழந்தைகளும் தக்க முறையில் பயன்படுத்தித் தங்கள் உணர்ச்சிகளைச் சித்திரங்கள் மூலம் தீட்டுவார்களேயாகில் அச் சித்திரங்கள் கால வெள்ளத்தால் அழியாது நிலைத்து நின்று தமது உன்னத இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

★

# இலங்கையின் நீர்ப்பாசனத் திட்டங்கள்

வி. கந்தவனம் B. A.

## 3. முறுத்தவலை நீர்ப்பாசனத் திட்டம்

முறுத்தவலை நீர்ப்பாசனத் திட்டம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உறுபொக்கை ஓயாப் பள்ளத்தாக்கிலுள்ள 3000 ஏக்கர் நிலத்துக்கும் நீர்ப்பாசன வசதிகளை அளித்து விவசாய விளைவுகளைப் பெருக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. மேலும், கிரம ஓயாத் திட்டத்தின் கீழுள்ள 5000 ஏக்கர் நிலத்துக்கும் உறுபொக்கை ஓயாத் திட்டத்தின் கீழுள்ள 4000 ஏக்கர் நிலத்துக்கும் இத் திட்டம் நீர் வழங்க வல்லது. எனவே இத் திட்டம் முடிவுற்றதும் இப்போதுள்ள 9000 ஏக்கர் நிலத்துக்கும் 3000 ஏக்கர் புதிய நிலத்துக்கும் நீர்ப்பாசன வசதிகள் இரு போகங்களிலும் பெறக்கூடியதாகவிருக்கும்.

முறுத்தவலை நீர்ப்பாசனத் திட்டம் அடுத்த ஆண்டு (1969) ஐப்பசி மாதமளவில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. காடுகளைத் திருத்திச் சேனை வேளாண்மை செய்தற்பொருட்டு முதல் ஆண்டில் 1500 பேர் இங்கு குடியேற்றப்படுவர். இப் பகுதி மண்வளம் நெல் வேளாண்மைக்கு மிகவும் ஏற்றதாகக் காணப்படுகின்றது. பெரும் போகத்தில் நெல்லையும் சிறுபோகத்தில் உப உணவுப் பொருட்களையும் பயிர் செய்வதற்கு புதிய நிலத்துக்கான அபிவிருத்தித் திட்டம் வழிவகுக்கின்றது. உப உணவுப் பயிர்களாகக் காய்கறிகள், மிளகாய், வெண்காயம் என்பவற்றைச் செய்கைபண்ணுவதற்கு இப் பகுதி நிலம் ஏற்றதாகும்.

இத் திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 50 புசல் வீதம் நெல் விளையுமென்றும் வருடத்தில் எல்லா நிலங்களிலும் விளையும் நெல் மொத்தமாக 7,50,000 புசல் ஆகுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுல் ஆண்டொன்றுக்கு ரூபா 80,00,000 வெளிநாட்டுச் செலவாணியும் மீதப்படும்.

தொடர்ச்சி:-

# புவி — பொது விபரம்

—மணிலா—

## நிலமும் நீரும்

புவியமைப்பு:

புவியின் உட்பாகம் அதன் வெளிப்பாகத்திலும் கூடிய அடர்த்தி கொண்டது. இத்தகைய அடர்த்திக்குக் காரணம் இப் பகுதியிலுள்ள உலோகப் பொருட்களேயாகும். கற்கோளம் என அழைக்கப்படும் இதன் வெளிப் பாகம் கற்பாறைகளா லாக்கப்பட்ட பகுதியாக இருக்கின்றது. கற்கோளத்தில் நீரினல் மூடப்பட்ட பாகங்களும் உள்ளன. இப் பாகங்கள் நீர்க்கோளம் எனப்படும். புவி முழுவதையும் வளிமண்டலம் மூடியுள்ளது.

பாறைகள் என்னும்போது அது கடினமானதும் உறுதியானதுமான பொருட்களையே குறிக்கும். ஆயின் புவியியலில் இலகுவில் உடைந்துவிடுந் தன்மையான கற்பாறைகள் மூன்று வகைப்படும். அவை:

i. தீப்பாறைகள்

இவை முதலில் உருகிய நிலையிலிருந்து பின்னர் இறுகிக் கடினமானவை. உ+ம்: கருங்கல்.

ii. அடையல் பாறைகள்

கடல், ஓடும் நீர் முதலிய உரிவுக் கருவிகள் கொண்டு வந்த அடையல்களாலானது. உ+ம்: வண்டல், சுண்ணம்புக்கல்.

iii. உருமாறிய பாறைகள்

வெப்பம், அமுக்கம் முதலிய காரணங்களால் தீப்பாறை, அடையல் பாறை என்பன உருமாற்றமடைகின்றன. இவை உருமாறும்போது வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றன.

உரிவுக் கருவிகள்:

ஓடும் நீர், கடலலை, பனிக்கட்டி, காற்று என்பன உரிவுக் கருவிகளாக உள்ளன. ஈரலிப்பான பகுதிகளில்

ஓடும் நீரும், கடற்கரைப் பிரதேசங்களில் கடலலையும், குளிர்ப் பகுதிகளில் பனிக்கட்டியும், பாலைநிலப் பாகங்களில் காற்றும் முக்கிய உரிவுக் கருவிகளாகும்.

நிலப்பகுதி:

புவியின் நிலப் பரப்பில் காற்பங்கே அதாவது 528 சதுர மைலே நிலமாக இருக்கின்றது. ஆசியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா, தென்னமரிக்கா, ஐரோப்பா, அவுத்திரேலியா, அந்தாட்டிக் கண்டம் (தென்முனைவு) எனக் கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பகுதி:

புவியின் நிலப்பரப்பில் முக்காற்பங்கு அதாவது 1410 சதுர மைல் நீர்ப்பகுதியாக உள்ளது. பசுபிக் சமுத்திரம் அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், ஆட்டிக்குச் சமுத்திரம், அந்தாட்டிக்குச் சமுத்திரம் என நீர்ப் பகுதி பிரிக்கப்பட்டுள்ளது.

இக் கண்டங்களும், சமுத்திரங்களும் சில ஒழுங்குகளுக்கமைய அமைந்திருக்கின்றன.

i. ஒரு பக்கத்தில் நிலப் பகுதி காணப்படுமேயாயின் அதற்கு நேர் எதிர்ப் பக்கத்தில் நீர்ப்பகுதி காணப்படும்.

ii. கண்டங்களும், சமுத்திரங்களும் முக்கோண வடிவின.

iii. வடவரைக் கோளத்தில் கண்டப் பகுதி கூடுதலாயும் தென்னரைக் கோளத்தில் சமுத்திரப் பகுதி கூடுதலாயுமிருக்கின்றது.

— வளரும்


## இவர்களிடம் வெற்றிமணி கிடைக்கும்

1. N. V. கந்தையா
நியூஸ் ஏஜன்ட்
சுன்னுகம் சந்தி
சுன்னுகம்

2. M. X. செல்வநாதன்
நியூஸ் ஏஜன்ட்
இல. 56 பெரியகடை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்

# சுய உதவி

## தேவகியும் தேநீரும் (34)

மு. க. சுப்பிரமணியம்

தேவகி ஆறு வயதுச் சிறுமி. வழக்கமாக அவளுடைய தாயார் காலையில் தேவகி நித்திரையைவிட்டு எழும்பியதும் தேநீர் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் காலை தேவகி எழும்பியதும் தேநீர் தாய் கொண்டுவந்து கொடுக்கவில்லை. தாய் படுக்கும் இடத்திற்போய்ப் பார்த்தாள். கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டாள். இரவு தாய் தனக்குச் சிறிது சுகமில்லை என்று கூறியது தேவகிக்குத் தெரியும். தாயை எழுப்ப விரும்பவில்லை. தாய் தேநீர் வைப்பதை தேவகி சில சமயங்களில் அவதானித்திருக்கிறாள்.

வழக்கமாக தேநீர் காலையில் குடித்து வந்தபடியால் அந்த நேரம் வந்ததும் தேநீர் குடிக்க வேண்டும் போலிருந்தது தேவகிக்கு. தாய் எழும்பி தேநீர் தயாரித்துத்தரும் வரை பொறுத்திருக்க விரும்பவில்லை அவள். தேவகி கேற்றலை எடுத்தாள். தண்ணீரைக் கேற்றலில்விட்டு அடுப்பில் வைத்து எரித்தாள். தண்ணீர் கொதித்ததும் தேயிலை, சீனி முதலியவற்றைத் தேடி எடுத்துத் தேநீர் தயாரித்தாள். தான் குடித்துப் பார்த்தாள். இனிக்கவில்லை. பின்பும் சிறிது சீனியைப் போட்டுக் கலக்கினாள்.

தயாரித்த தேநீரைத் தான் குடித்தாள். அவளுக்கு தான் தயாரித்த தேநீர் என்பதனால் அளவற்ற மகிழ்ச்சி. ஒரு கோப்பையில் தேநீரைக்கொண்டு தாய் படுக்கும் இடம் சென்றாள். ''அம்மா'' என எழுப்பினாள். தாய் கண் விழித்துப் பார்த்தாள். தேவகி கையில் தேநீருடன் நிற்பதைக் கண்டாள். தாயின் வருத்தம் அரை வாசி சுகமாய்விட்டது. தேவகியை அணைத்துக்கொண்டு ஒரு கதை கூறுகிறேன் கேள் என்று கூறிக் கதையை ஆரம்பித்தாள்: ''ஒரு நாள் ஒரு காகம் தண்ணீர்த் தாகத்தால் அங்கு மிங்கும் அலைந்து திரிந்தது. தண்ணீர் அகப்படவில்லை. ஒரு வீட்டு முற்றத்தில் ஒரு குடம் இருக்கக் கண்டு சந்தோஷத்துடன் பறந்து சென்று குடத்தில் இருந்த தண்ணீரைக் குடிக்க முயன்றது. ஆனல், தண்ணீரோ மிகவும் சொற்பம் காகத்திற்கு தண்ணீர் எட்டவில்லை. காகத்திற்கு ஒரு யோசனை உதித்தது. பக்கத்தே யுள்ள சிறுகற்களை ஒவ்வொன்ருக எடுத்துக் குடத்தினுள் போட்டது. சிறிது நேரத்தில் தண்ணீர் மிதந்தது. காகம் தண்ணீரைப் பருகித் தாகம் தீர்ந்து சந்தோஷத்துடன் பறந்தது. ''தன் கையே தனக்குதவி'' எனக் கூறிமுடித்தாள் தாய்.

தொடர்ச்சி:

# கணக்கியலுக்கோர் அறிமுகம். 5.

வை. சி. சிவஞானம்

## சில்லறைக் காசேடு:

காசேட்டின் ஒரு பகுதி வேலையைச் சில்லறைக் காசேடு செய்கின்றது. குறைந்த பெறுமதியுள்ள செலவினங்களைப் பதிவதற்காக இவ்வேடு பயன்படுத்தப்படுகிறது. சில்லறைக் காசேட்டைப் பின் வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவர்.

1. காசேட்டில் வியாபார நடபடிக்கைகள் அதிகரித்துவிட்டால் காசேட்டின் வேலையை இலகுவாக்கும் பொருட்டு குறைந்த பெறுமதியுள்ள செலவின் நடபடிக்கைகளைக் காசேட்டிலிருந்து பிரித்து அவற்றைச் சில்லறைக் காசேட்டில் பதிவர்.
2. ஒரு வியாபார நிலையம் தனது கொடுப்பனவுகளைக் காசோலை மூலமே கொடுக்கும் வழக்கமுடையதாக இருப்பின் குறைந்த பெறுமதியுள்ள கொடுப்பனவுகளுக்கும் காசோலையைப் பயன்படுத்தமுடியாது. காசோலைகளாகத் தொகைகளைப் பெறுபவருக்கும் சிரமம். வியாபார நிலையத்திற்கும் சிரமம். வங்கி நடபடிக்கைகளைக் காசேட்டில் பதிந்துகொண்டு வங்கியில் இருந்து சில்லறைச் செலவுகளுக்கென ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்து அப்பணத்துக்குப் பொறுப்பாகவுள்ளவர் சில்லறைக் காசேட்டில் நடபடிக்கைகளைப் பதிவர்.

## சில்லறைக் காசேட்டை எழுதும் முறை:

சில்லறைக் காசேட்டுக்குப் பொறுப்பாக இருப்பவரை சில்லறைக் காசாளன் என அழைப்பது வழக்கம். சில்லறைக் காசாளன் பெறும் பணத்தைச் சில்லறைக்காசேட்டின் பற்று நிரலிலும் அவன் கொடுக்கும் தொகைகளைச் சில்லறைக் காசேட்டின் வரவு நிரலிலும் பதிதல் வேண்டும்.

## சில்லறைக் காசேட்டின் வகைகள்:

1. சாதாரண முறைச் சில்லறைக் காசேடு.
2. நிரன் முறைச் சில்லறைக் காசேடு.
3. முற்பண முறைச் சில்லறைக் காசேடு.
   (அ) சாதாரண முற்பண முறைச் சில்லறைக்காசேடு.
   (ஆ) முற்பண நிரன் முறைச் சில்லறைக் காசேடு.

## சாதாரண முறைச் சில்லறைக் காசேடு:

இது ஒரு நிரன் முறைக் காசேட்டைப் போன்றது. சில்லறைக் காசாளன் பெறும் பணத்தை சில்லறைக் காசேட்டின் பற்று நிரலிலும் சில்லறைக் காசாளன் கொடுக்கும் பணத்தை வரவு நிரலிலும் பதிதல் வேண்டும்.

**(உ+ம்) பின்வரும் நடபடிக்கைகளைச் சாதாரணமுறைக் காசேட்டில் பதிக:**

| | | | |
|---|---|---|---|
| தை | 1. | சில்லறைக் காசாளன் பெற்ற பணம் | 100/- |
| ,, | 5. | கூலி | 15/- |
| ,, | 8. | தபாற் செலவு | 10/- |
| ,, | 10. | பிரயாணச் செலவு | 25/- |
| ,, | 15. | கூலி | 8/- |
| ,, | 20. | தபாற் செலவு | 12/- |
| ,, | 25. | பிரயாணச் செலவு | 15/- |

## சாதாரண முறைச் சில்லறை காசேடு

பற்று | வரவு

| மீ | உ | விபரம் | பெய பக் | ரூ. | ச. | மீ | உ | விபரம் | பெய பக் | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 1 | பெற்ற பணம் | | 100 | 00 | தை | 5 | கூலி | | 15 | 00 |
| | | | | | | ,, | 8 | தபாற் செலவு | | 10 | 00 |
| | | | | | | ,, | 10 | பிரயாணச் செலவு | | 25 | 00 |
| | | | | | | ,, | 15 | கூலி | | 8 | 00 |
| | | | | | | ,, | 20 | தபாற் செலவு | | 12 | 00 |
| | | | | | | ,, | 25 | பிரயாணச் செலவு | | 15 | 00 |
| | | | | 100 | 00 | | | மீதி (கீ. கொ. செ) | | 15 | 00 |
| மாசி | 1 | மீதி (கீ. கொ. வ.) | | 15 | 00 | | | | | 100 | 00 |

## நிரன்முறைக் காசேடு:

சில்லறைக் காசேட்டின் வரவு நிரலில் வரும் நடவடிக்கைகள் பல ஓரின நடவடிக்கைகளாக இருக்கும். அதிகமாக வரும் ஓரின நடவடிக்கைகளுக்கு ஒவ்வோர் நிரல்கள் அமைத்து அந் நிரல்களில் பதிதல் வேண்டும். முதலில் ''மொத்த நிரல்'' என ஒரு நிரலிட்டு எல்லாச் செலவினங்களும் அந் நிரலில் பதிதல் வேண்டும். நிரல்கள் வகுக்க முடியாத சில நடவடிக்கைகள் மட்டுமுள்ள செலவினங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ''சில்லறைச் செலவு நிரல்'' என ஒரு நிரலிட்டு அந் நிரலில் பதியலாம். எல்லா வியாபார நிலையங்களினதும் சில்லறைக் காசேட்டின் வரவுப் பாகுபாட்டின் நிரல்களில் மொத்தச் செலவுகள், சில்லறைச் செலவுகள், பெயரேட்டுக் கணக்குகள் என்பவற்றிற்கு ஒவ்வோர் நிரல்கள் இடப்பட்டிருக்கும். ஏனைய நிரல்கள் அவ்வவ் வியாபார நிலையங்களின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப ஒதுக்கப்படும்.

மொத்தச் செலவு நிரல்களின் கூட்டுத் தொகையும், பாகுபாட்டு நிரல்களின் கூட்டுத் தொகையும் சமனாக இருக்கும். பற்று நிரலுக்கும் வரவு நிரலுக்கும் உள்ள வித்தியாசத் தொகையை வரவு நிரலில் மீதியாகப் பதிந்து இரு பக்க நிரல்களையும் சமப்படுத்திக் கூட்டுதல் வேண்டும். கூட்டுத் தொகைகளின்கீழ் கணக்கு முடிந்தமைக்கு அறிகுறியாக சிவப்பு மையினால் இரு கோடுகள் இடல்வேண்டும். மீதித் தொகையை அடுத்த மாதக் கணக்கில் பற்று நிரலுக்கு இறக்குதல் வேண்டும்.

**உதாரணம்:**


| | | | |
|---|---|---|---|
| தை | 1 | காசாளனிடம் பெற்ற பணம் | 150 - 00 |
| ,, | 3 | கூலி | 15 - 00 |
| ,, | 4 | வண்டிக் கூலி | 20 - 00 |
| ,, | 5 | தபாற் செலவு | 5 - 00 |
| ,, | 6 | தூக்குக் கூலி | 7 - 00 |
| ,, | 8 | முத்திரை | 6 - 00 |
| ,, | 10 | பேப்பர், பென்சில் | 6 - 00 |
| ,, | 12 | தந்திச் செலவு | 12 - 00 |
| ,, | 13 | பைல் | 4 - 50 |
| ,, | 15 | பார்சல் செலவு | 3 - 50 |
| ,, | 18 | பதிவுத் தபால் கூலி | 3 - 25 |
| ,, | 20 | தேநீர்ச் செலவு | 5 - 75 |
| ,, | 22 | பேனா மை | 4 - 10 |
| ,, | 23 | தர்மம் | 2 - 00 |
| ,, | 26 | நாதனுக்குக் கொடுத்த சரக்கேற்றும் வண்டிற் கூலி | 12 - 00 |
| ,, | 28 | வியாபார நிலையச் சுத்திகரிப்பு | 5 - 00 |

மேற்கூறிய நடபடிக்கைகளை நிரல்முறைக் காசேட்டில் பதிக.

# நிரன்முறைச் சில்லறைக் காசேடு

| ரூ. | ச. | மீ | உ | விபரம் | தொகை ரூ. | தொகை ச. | கூலி ரூ. | கூலி ச. | தபால் ரூ. | தபால் ச. | சுந். செல ரூ. | சுந். செல ச. | சில். செல ரூ. | சில். செல ச. | பெயரேட் கணக்கு | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 150 | 00 | தை | 1 | காசாளனிடம் பெ. பண | | | | | | | | | | | | | |
| | | ,, | 3 | கூலி | 15 | 00 | 15 | 00 | | | | | | | | | |
| | | ,, | 4 | வண்டிக் கூலி | 20 | 00 | 20 | 00 | | | | | | | | | |
| | | ,, | 5 | தபாற் செலவு | 5 | 00 | | | 5 | 00 | | | | | | | |
| | | ,, | 6 | தூக்குக் கூலி | 7 | 00 | 7 | 00 | | | | | | | | | |
| | | ,, | 8 | முத்திரைச் செலவு | 6 | 00 | | | 6 | 00 | | | | | | | |
| | | ,, | 10 | பேப்பர் பென்சில் | 6 | 00 | | | | | 6 | 00 | | | | | |
| | | ,, | 12 | தந்திச் செலவு | 12 | 00 | | | 12 | 00 | | | | | | | |
| | | ,, | 13 | பைல் மட்டை | 4 | 50 | | | | | 4 | 50 | | | | | |
| | | ,, | 15 | பார்சல் செலவு | 3 | 50 | | | 3 | 50 | | | | | | | |
| | | ,, | 18 | பதிவுத் தபால் | 3 | 25 | | | 3 | 25 | | | | | | | |
| | | ,, | 20 | தேநீர்ச் செலவு | 5 | 75 | | | | | | | 5 | 75 | | | |
| | | ,, | 22 | பேனு மை | 4 | 00 | | | | | 4 | 00 | | | | | |
| | | ,, | 23 | தருமச் செலவு | 2 | 00 | | | | | | | 2 | 00 | | | |
| | | ,, | 26 | நாதனுக்காக கொடுத்தது வ. கூலி | 12 | 00 | | | | | | | | | நாதன் கணக்கு | 12 | 00 |
| | | ,, | 28 | சுத்தம் செய்தல் | 5 | 00 | | | | | | | 5 | 00 | | | |
| | | ,, | 31 | | 111 | 00 | 42 | 00 | 29 | 75 | 14 | 50 | 12 | 00 | | | |
| 150 | 00 | | | மீதி (கீ. கொ. செ.) | 39 | 00 | | | | | | | | | | | |
| | | | | | 150 | 00 | | | | | | | | | | | |
| 39 | 00 | மாசி | 1 | மீதி (கீழே கொ. வந்.) | | | | | | | | | | | | | |

தொடரும்




# ஒற்றுமைப் புலவர்

த. மதுபாலசிங்கம், விநாயகர் வீதி, முள்ளியவளை.

கம்பர், கச்சியப்பர் ஆகிய இரு புலவர்களும் இயற்றிய நூல்களில் பெருமளவு ஒற்றுமை இருப்பதை நம்மால் காணமுடிகிறது. கம்பர் இயற்றிய நூல் இராமாயணம் இது இராமனை நாயகனாகவும் வில்லை ஆயுதமாகவும் கொண்டு விளங்குகின்றது. கச்சியப்பர் இயற்றிய நூல் கந்தபுராணம். இது முருகனை நாயகனாகவும் வேலை ஆயுதமாகவும் கொண்டு இயங்குகிறது. இரு நூல்களினதும் போக்கும் நோக்கும் ஒரே தன்மையதாகவுள்ளது. இரு நூல்களிலும் அரக்கர் கோமானாகிய சூரபத்மனும், அசுரர் வேந்தனாகிய இராவணனும் மறநெறியில் சென்று கொண்டிருந்தனர். இதனால் முருகனும், இராமனும் மறங்கடிந்து அறங்காக்க முற்பட்டனர். இலங்காபுரியில் இராவணன் நிறுவிய அரசு இராமனது வில்லால் அழிந்தது. வீரமகேந்திரபுரியில் சூரபத்மன் அமைத்த அரசு முருகனது வேலால் முறிந்தது.

இலங்காபுரியில் அரசு செலுத்திய இராவணன் மாதவம் புரிந்து பெருவரங்கள் பெற்றான். இதனால் செருக்குற்ற இவன் தேவரை வென்றான். நிலவேந்தர்கள் இவனுக்கு அடிபணிந்தனர். இவன் கும்பகர்ணன், விபீடணன் முதலிய தம்பியாருடனும், இந்திரஜித்தன் முதலிய மைந்தரோடும், சூர்ப்பனகை போன்ற தங்கையரோடும் வாழ்ந்தான்.

இராவணனைப் போலவே சூரபத்மனும் தவம் செய்து வரம் பெற்றான். இதன் பயனாக விண்ணுலகையும் வென்று தேவர்களை வீரமகேந்திரத்தில் சிறை வைத்தான். சிங்கமுகன் போன்ற தம்பியரோடும், அஜமுகி போன்ற தங்கையரோடும், பானுகோபன் முதலிய மைந்தரோடும் கொடுங் கோன்மை செய்து வந்தான். இராவணன் வளர்த்த மறத்தையும், சூரபத்மன் வளர்த்த அதர்மத்தையும், முறையே இராமனது வில்லும், முருகனது வேலும் அடக்கி அறத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டின.

இரண்டு கொடுங் கோன்மையர்க்கும் இரண்டு தங்கைமார் இருந்தனர். இவர்கள் தாம் அதர்மம் என்னும் வேங்கைக்குப் பால்

வார்ப்பவர்களாக இருந்தனர். இவர்களே தமையன்மாரின் அழிவுக்கு அச்சாணியாக இருந்தனர். சூர்ப்பனகை இராவணன் தங்கை. அஜமுகி சூரன் தங்கை. இவர்களிருவரும் அண்ணன்மாருக்குப் பெண் பார்த்தபோது அங்கவீனம் செய்யப்பட்டார்கள்.

காட்டிலே பர்ணசாலை அமைத்து, அங்கே தங்கியிருந்த சீதாதேவியை, இராவணனுக்குப் பெண்பார்க்கச் சென்றபோது இலக்குவன் தன் கூந்தலைப்பற்றி இழுத்து மூக்கை வாளால் அரிந்து மானபங்கப் படுத்தியதாக இராவணனிடம் முறையிட்டாள்.

மூக்கறுபட்ட சூர்ப்பனகை சீறினள்; உற்றூர் உறவினரைக் கூவி அழைத்தாள். அந்நேரத்தில் கரன் என்னும் அசுரன் கொடிய சேனையோடு கொதித்தெழுந்து, இராமனது வில்லால் உயிர் துறந்தான். பின்னர் சூர்ப்பனகை 'இராவணனிடம் முறையிட்டாள். இதனுற் கடுஞ் சீற்றமடைந்த இராவணன், இராமலட்சுமணர் இல்லாத சமயம் பார்த்து சீதையைப் பர்ண சாலையோடு பெயர்த்தெடுத்து அசோகவனத்தில் சிறையிட்டான். சீதையின் கண்ணீர் அறப்படையை இலங்கைக்கு வரவழைத்தது.

சூரனின் அட்டகாசத்தைப் பொறுக்க முடியாத இந்திரன் தன் நாட்டை விட்டுக் காட்டில் ஒரு பூஞ்சோலை அமைத்து அங்கே இந்திராணியோடு வாழ்ந்தான். இந் நேரத்தில் சூரனுல் வருந்திய வானவர் இந்திரனிடம் சென்று முறையிட்டனர். இதனுல் இந்திரன், இந்திராணியை மாசாத்தன் காவலில் வைத்துவிட்டு ஈசனிடம் சென்றுன். இந் நேரத்தில் அஜ முகி அவ்விடம் வந்தாள். சூரபத்மனுக்குப் பெண்பார்த்து அவளைக் கவரச் சென்றுள். உடனே மாசாத்தன் அஜமுகியின் கையை வாளால் வெட்டினுன்.

கையற்ற அஜமுகி கதறி அழுதாள். அறுபட்ட கையோடு சூரன் முன் சென்று நடந்தவற்றை முறையிட்டாள். தனக்காகப் பாடுபட்ட தங்கைக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு விண்ணுலகின்மீது படையெடுத்தான். தேவர்களைச் சிறை வைத்தான். தேவர் அழுத கண்ணீர் அறப்படையை வீரமகேந்திரத்திற்கு வரவழைத்தது.

இராமாயணத்திலும், கந்தபுராணத்திலும் இரு பெரும் தூதர்கள் இருக்கின்றூர்கள். இராம தூதன் அநுமன். முருக தூதன் வீரவாகு தேவன். அநுமன் வானர குலத்தைச் சேர்ந்தவன். வீரவாகு தேவன் செழிப்பு மிக்க செங்குந்த குலத்தைச் சேர்ந்தவன். அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்ட அநுமன் ஆனந்தக் கூத்தாடினுன். நந்தவனத்தை உருமாறச் செய்தான். இதனுற் கோபங்கொண்ட அரக்கர், அநுமன் மீது போர் தொடுத்தனர். அநுமன், அரக்கரைப் பூமியோடு சேர்த்து அழித்தான். இறுதியில் இந்திரஜித்தன் வீசிய பாணத்தில் அகப்பட்டு

இராவணன் முன்னிலையில் நிறுத்தப்பட்டான். அநுமனை இராவணன் தண்டித்தான். வாலிலே நெருப்பை மூட்டினன். இதனல் அநுமன் கோட்டை கொத்தளங்களைத் தீக்கிரையாக்கினன். வெற்றியுடன் இராமனிடஞ் சென்ருன்.

முருக தூதன் வீரவாகு தேவன் வீரமகேந்திரத்தை அடைந்தான். சூரனுக்குரிய அறிவுரைகளைக் கூறினன். ஆனல், அவை புறக்குடத்து நீராயின. இறுதியில் போருக்கு ஆயத்தம் செய்யும்படி கூறிவிட்டுத் திரும்பினன்.

இவைபோன்று இன்னும் பல ஒற்றுமைகள், இவ்விரு நூல்களிலும் காணப்படுகின்றன.

★

# துரோகம்

நுரைசிங்கம். குகதாசன், நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.

அன்று தீபாவளி நாள். எட்டுத் திக்குகளிலும் டொம்! டொம்! என்று வெடிச் சத்தம் கேட்டது. சிறுவர்களும், சிறுமிகளும் புது ஆடைகள் அணிந்து வீதிகளில் ஓடிப் பாடிச் சென்றனர். ஆனல், கோபாலன் என்ற பத்து வயதுச் சிறுவனின் வீட்டில் மட்டும் ஒரே கூக்குரல். ஏன்? வறுமையின் கொடுமையாலும், பிணியினலும் அவனது தகப்பன் இறந்துவிட்டார். இந்த ஏக்கத்தினல் அவனது தாயும் உடன்கட்டை ஏறிவிட்டாள். பாவம்! கோபாலனின் கண்களிலிருந்து கண்ணீர் ஆருகப் பெருகியது. இப்பொழுது பெற்ருேர், உற்ருர் இன்றி யாரையும் அறியாத அனதைப் பிள்ளையாக ஒரு சிறு மண் குடிசையில் உண்ண உணவின்றி வாழ்ந்து வருகிருன். பசியின் கொடுமை தாங்க இயலாது யாதாயினும் காசு இருக்குமோ என்று எண்ணிப் பெட்டகங்களை எல்லாம் கிளறிக் கிளறிப் பார்த்தான். அப்பொழுது அவன் கையில் கடிதம் ஒன்று சிக்கியது. அவசரம் அவசரமாக அதை விரித்துப் பார்த்தான். அதில்:-

.........நாங்கள் உனது தகப்பனுமல்ல, தாயுமல்ல. உனது தகப்பனின் ''போட்டோ'' இக் கடித உறைக்குள் இருக்கிறது. ஒரு நாள் நாங்கள் பசியின் கொடுமை தாங்க இயலாது எங்கேயாவது உணவு தேடலாமா என்று எண்ணி வீதி வழியாகச் சென்ருேம். அப்பொழுது நீயும் உனது தகப்பனும் வீட்டு வாசற்படியில் இருந்து விளையாடிக்கொண்டிருந்தீர்கள். நாங்கள் உங்களிடம் வந்து பிச்சை கேட்டோம், அப்பொழுது உன் தகப்பன் எங்களைப் பார்த்து போ வெளியே என்று ஏசிவிட்டு உன்னை இருந்த இடத்தில் விட்டுவிட்டு வீட்டுக்குட் சென்ருர். அப்பொழுது நீ போட்டிருந்த சங்

கிளியைக் கண்டு பேராசையுற்று அதை விற்றுப் பெரும் பணம் சம்பாதிக்கலாம் என்றெண்ணி உன்னை இங்கு தூக்கி வந்தோம். அப்பொழுது உனக்கு நான்கு வயதிருக்கும். இப்படிக்கு
இராஜவேல்

உடனே அழுதுகொண்டு அப் போட்டோவை எடுத்து நூலில் கட்டிக் கழுத்தில் போட்டுக்கொண்டு தன்னை அறியாமலே கால் போன போக்காகக் காட்டுவழியாகச் சென்றான் கோபாலன். அவன் புதர்களை எல்லாம் தாண்டி இரண்டடி நகர்ந்தான். பாவம்! திடீரென நடக்கமுடியாமல் தொம் என்று விழுந்தான். 'பசிக்கிறதே' என்று முணுமுணுத்துக்கொண்டு கண்களில் இருந்து கண்ணீர் ஆறுகப் பெருக எழுந்து நடக்க முயன்றான். ஆனால்..... அவனால் முடியவில்லை. கால்களும் கைகளும் பின்னின. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிப் பயங்கரமாக வலி எடுத்தது. முகம் காய்ந்து வெளுறி வதங்கியது. தனது மனோ திடத்தையெல்லாம் ஒருங்கு சேர்த்து கொஞ்சம் பலத்தை ஏற்படுத்திக்கொண்டு முணுங்கிக் கொண்டே மெல்ல நடக்க ஆரம்பித்தான். குறுக்கே வயல்கள் வழியாக நடக்கவேண்டி இருந்தது. மெதுவாகத் தடுமாறித் தடுமாறித் தாண்டித் தாண்டி விழுந்தும், புரண்டும் வயல்களைத் தாண்டியபின் ஒரு படி மேல் வீழ்ந்து கிடந்தான். சிறிது நேரத்தின் பின் உணர்வு மெதுவாக ஆரம்பித்ததும் இரு கண்களையும் அகலத் திறந்து பார்த்தான். கிழக்கே வெகு தூரத்திற்கு அப்பால் வரிசையாக விளக்கொளிகள் தெரிந்தன. கோபாலன் அங்கே மெல்ல மெல்ல நடந்து சென்றான். திடீரென அதிர்ச்சியுற்று விழுந்தான். ஏன்? அது இறந்தவர்களை எரிக்கும் சுடுகாடு. ஆந்தைகளின் ஒலிச் சத்தத்தைக் கேட்டுத் திடீரென எழும்பினான். பயத்தினால் நடுங்கினான். அத்துமீறிய அவனது பயத்தின் வேகம் அவனது ஒவ்வோர் நரம்பிலும் பாய்ந்தோடியது. அப்பொழுது கறுப்பு உடை தரித்துக் கையில் பொல்லுடன் பயங்கரமான தோற்றமுடைய ஒரு மனிதன் அவனை நோக்கி நடந்து வந்தான். கோபாலனைப் பார்த்து நீ யாரடா? அர்த்த இராத்திரியிலே என்னையும் மீறி இங்கு எதற்காக வந்தாய்? என்று அதட்டி உறுக்கிக்கொண்டான். கோபாலனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினால் அவனால் பேசவோ, நகரவோ இயலாத ஊமைபோல் இருந்தான். வந்தவனுக்கோ கோபம் அத்துமீறிப் பொங்கி எழுந்தது. அவன் உடலில் மறைந்திருந்த கோப உணர்வு காட்டுமிராண்டித் தனமான செயலுக்கு அவனது அவயவங்களைத் தூண்டிவிட்டது. அப்படி இருந்தபோதிலும் மனத்தில் உள்ள கோபத்தை அடக்கிக்கொண்டு மிகவும் அன்பாக ஒரு புன்னகை பூர்த்து ஏன் இங்கு வந்தாய்? என்று மிகவும் தயவு தாட்சணியுடன் கேட்டான். நான் ஒரு அனாதைப் பிள்ளை. சரியாகப் பசிக்கிறது. உணவு இருந்தால் தாருங்கள் என்று மிகவும் பணிவாகக் கேட்டான். இரக்கம்கொண்டு கோபாலனுக்கு உணவு கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான். கோபாலன் சாப்பிட்டுவிட்டு பக்கத்தில் இருந்த வீடொன்றின் திண்ணையில் படுத்துறங்கினான்.

சூரியன் தன் நிறக்கதிர்களை எங்கும் பரப்பிக்கொண்டு வந்தான். வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு ஒரு மனிதன் வெளியே வந்தான். அன்று சுடலையில் கண்ட சிறுவன் நித்திரை செய்துகொண்டிருப்பதையும் அவனது கழுத்தில் தனது போட்டோ இருப்பதையும் கண்டு ஆச்சரியமுற்றான். உடனே அச் சிறுவனை எழுப்பி இப் போட்டோ உனக்கு எப்படிக் கிடைத்தது என்று கேட்டான். கோபாலன் நடந்த அனைத்தையும் கூறி, கடிதத்தையும் எடுத்துக் கொடுத்தான். உடனே மகனே என்று கட்டித் தழுவி முத்தமிட்டு அன்புடன் அணைத்தான். நான் நாட்டிலுள்ள மக்களுக்குத் துரோகம் செய்தேன். அதனாற்றான் இவ்வளவு காலமும் உன்னைவிட்டுப் பிரிந்திருந்தேன் என்று சொல்லி அழுதான். கோபாலன் அம்மா! அம்மா! என்று கத்திக்கொண்டு வீட்டுக்குள்ளே ஓடினான். அப்பொழுது தகப்பன் கையைப் பிசைந்துகொண்டு ஓலமிட்டு அழுதான். கோபாலன் அப்பொழுது ஏன் அப்பா அழுகிறீர்கள்? அம்மா எங்கே என்று கேட்டான். தகப்பன் அழுதபடியே நீ எப்போ வீட்டிலிருந்து காணமற் போனாயோ அன்றே உனது அம்மாவும் ஏக்கத்தினால் இவ்வுலகத்தை விட்டு நீங்கிவிட்டா என்றார். உடனே கோபாலன் அம்மா! அம்மா! என்று குளறி ஓலமிட்டு அழுதான். தகப்பன் கோபாலனை ஒருவாறு சாந்தப்படுத்திக்கொண்டு நான் நாட்டிலுள்ள அத்தனை ஏழை எழியவர்களுக்கும் 'துரோகம்' செய்ததினாலேதான் உன்னை இவ்வளவு காலமும் பிரிந்திருக்க நேர்ந்தது. அதோடு உனது அம்மாவையும் பறிகொடுத்துவிட்டேன். இனி எவருக்காயினும் துரோகம் செய்யவே மாட்டேன் என்றான்.

---

## மதனும் மாயமோதிரமும்

ஏ. சிவராசா — முள்ளியவளை.

தன் உயிர்களைப்போல் பிற உயிர்களையும் காப்பாற்றி வந்தான் ராஜவர்மன் என்ற அரசன். அவன் மகன் மதன் பல நாட்களுக்கு முன்பே தந்தையைவிட்டுப் பிரிந்து சென்றான். சென்றபொழுது ஒரு மாயமோதிரத்தையும் உடன் கொண்டு சென்றான். அந்த மாயமோதிரத்தில் ராஜவர்மனின் சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது.

மதன் பல வருடங்களாகப் பல இடங்களுக்கும் சென்று கடைசியாக மாரனூர் என்ற கிராமத்தையடைந்தான். அக்கிராமத்தில் இருந்த அழகிற் சிறந்த மல்லிகை என்ற மங்கையை விவாகம் செய்து சிலகாலம் அங்கே இருந்தான். பின்னர் அயலூர் சென்று அங்கே வசித்த மூதாட்டி ஒருத்தியின் வீட்டில் தங்கியிருந்தனர். மூதாட்டி இவர்களுக்கு உணவு கொடுத்து வந்தாள்.

மதனும், மல்லிகையும் அங்கேயுள்ள குளத்தில் நீராடச் செல்வது வழக்கம். மூதாட்டி வஞ்சகமே உருவானவள். மதனைக் கொன்று மாயமோதிரத்தைக் கைப்பற்றி மல்லிகையைத் தன் ஒரேமகனுக்குத் திருமணம் செய்ய எண்ணினாள். நஞ்சு கலந்த உணவைக் கொடுத்து மதனைக் கொன்றாள். மாயமோதிரத்தைக் கவர்ந்து கொண்டாள். மல்லிகை அழுது புலம்பினாள். மூதாட்டி ஒன்றுமறியாதவள்போல் மல்லிகையைத் தேற்றினாள். சில தினங்களுக்கு முன் மூதாட்டி தனக்கொரு மகன் இருக்கிறான் என்றும் அவன் ஒரு முனிவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் அரிய உதவி செய்தானென்றும் அதற்காக முனிவர் இறந்தவர்களை எழுப்பும் சக்தியை மகனுக்குக் கொடுத்தார் என்றும் தற்பொழுது மகன் தேவன் தீர்த்த யாத்திரை சென்றுள்ளான் என்றும் தனக்குக் கூறியவை மல்லிகையின் ஞாபகத்துக்கு வந்தது. அவளின் துயர் ஒரு சிறிது குறைந்தது.

மல்லிகை தன் கணவன் மதனின் உடலை ஒரு கண்ணாடிப் பெட்டியில்வைத்து குளத்தருகில் புதைத்து வைத்தாள். மூன்று தினங்களால் மூதாட்டியின் மகன் தேவன் வீட்டுக்கு வந்தான். அங்கே ஒரு மங்கை அழுத கண்ணீருடன் இருப்பதைக் கண்டான். அவள் முகத்தை உற்று நோக்கினான். அன்றொரு நாள் தன்னைப் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய மல்லிகை என்பதை அறிந்து அவளுக்கு என்ன நடந்தது என்று கேட்டான். மல்லிகை தயங்கினாள். ''தாயின் செயல் தனயனுக்குத் தெரியாமற் போகாது. நடந்ததைக் கூறு'' என்றான் தேவன். நடந்தவற்றை விபரமாகக் கூறினாள் மல்லிகை.

''அண்ணா அன்றொரு நாள் கொடிய செங்கண் அரவத்திலிருந்து உங்களைக் காப்பாற்றினேன். நீங்கள் அந்த நேரத்தில், எந்த ஆபத்து எனக்கு நேர்ந்தாலும் என்னைக் காப்பாற்றுவதாக வாக்குத்தந்தீர்கள். இப்போ என்னைக் காப்பாற்றவேண்டும் என்றிரந்தாள். ''பயப்படாதே மல்லிகை. உனக்குத்தேவை உன் கணவன்தானே! அவரை யான் உயிர் பெறச் செய்வேன். கவலையை விடு'' என்று கூறித் தாயிடம் சென்றான். மகனைக் கண்ட தாய் சந்தோஷமடைந்தாள். தனிமையில் தன் மனக்கருத்தைத் தேவனிடம் கூறினாள். தேவன் தாயின் இழி செயல்களுக்காக அவளை ஏசிவிட்டு மாயமோதிரத்தையும் எடுத்துக்கொண்டு மல்லிகையுடன் குளக்கரையை அடைந்தான்.

மல்லிகை தன் கணவனைப் புதைத்து வைத்த இடத்தைக் காட்டினாள். தேவன் தோண்டி கண்ணாடிப்பெட்டியைத் திறந்து மதனை உயிர்பெறச் செய்தான். தாயிடமிருந்து எடுத்துவந்த மாயமோதிரத்தையும் மதனிடம் கொடுத்தான். மூவரும் அன்றிரவு அக்குளக்கரையில் தங்கினர். மோதிரத்தின் உதவிகொண்டு மூவரும் உணவருந்தினர். மதனின் வேண்டுகோளின்படி மதனின் தந்தையிடம் செல்லத் தயாராகி ஒரு குதிரைமேல் மூவரும் ஏறிச் சென்றனர். சூரியன் அஸ்தமித்தான். மூவரும் ஒரு ஆற்றங் கரையிலுள்ள மரத்

தின்கீழ் தங்கி உணவருந்திவிட்டு உறங்கினர். மதன் அதிக களைப்பினால் சீக்கிரம் தூங்கிவிட்டான்.

அந்த மரத்தில் நெடு நாட்களாக இரு பஞ்சவர்ணக்கிளிகள் வாசஞ் செய்துவந்தன. ஒன்றை ஒன்று நோக்கி "இம் மரத்தின்கீழ் உள்ள மூவரும் காலையில் புறப்பட்டுச் செல்ல இருக்கும் வழியில் ஒரு பெரிய பாழ்மண்டபம் உண்டு. அது இவர்களுக்குமேல் இடிந்து வீழ்ந்து மூவருமே இறப்பர். இதில் உயிர் பிழைத்தால் அடுத்து ஒரு பூமிப்பிளவு ஏற்படும். அதிலும் இவர்கள் தப்பினால் மதனை அவனது அரண்மனையில் நான் குறிப்பிடும் மாதம் திகதி நேரத்தில் ஒரு பாம்பு தீண்டும். அவன் இறப்பான். நான் இப்போ கூறியவற்றை மனிதர் யாராவது கேட்டுக் கொண்டிருந்து வேறு ஒருவருக்குக் கூறினால் அவரின் தலை ஆயிரம் துண்டாக வெடிக்கும். வெடித்து இறப்பவரின் தலையில் இன்னும் நான்கு மாதத்தில் மல்லிகை பெற்று எடுக்க இருக்கும் குழந்தையை இரண்டாக வெட்டி அந்த இரத்தத்தை சிந்தும்படி விட்டால் அவர் உயிர் பெற்று எழுவார்" என்று கூறியது.

இவற்றைக் கேட்ட மல்லிகையும், தேவனும் இடியேறுண்ட நாகம் போல ஏங்கித் திகைத்தனர். விடிந்ததும் மூவரும் குதிரை மேலேறிச் சென்றனர். மாயமோதிரத்தாற் கிடைத்த குதிரையானது ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்றது. பாழ் மண்டபத்தின் மீதாகப் பறக்கும்போது மண்டபம் இடிந்த காரணத்தை மதன் தேவனிடம் கேட்க, அம்மண்டபம் குதிரை பாய்ந்த வேகத்தில் இடிந்தது எனக் கூறினான். சிறிது தூரஞ் சென்றதும் பூமியானது இரண்டாகப் பிளந்து மரங்கொடி செடி யாவற்றையும் விழுங்கியது. இதையும் ஆச்சரியத்துடன் கண்ட மதன் பூமி பிளந்த காரணத்தைக் கேட்டு முடியுமுன் அரண்மனை வாசலை அடைந்தது குதிரை.

அரண்மனைக் காவலரிடம் அரசரின் சின்னம் பொறிக்கப்பட்ட மோதிரத்தைக் காட்டி மூவரும் உள்ளே சென்றனர். மதன் அரசனை நோக்கி "அரசே! நான்தான் தங்களை விட்டுப் பிரிந்து சென்ற மகன் மதன். இவள் என் மனைவி மல்லிகை. மற்றவர் என் உயிர்த் தோழன் தேவன்" என்றான். அரசன் "நான் நம்பவே மாட்டேன், எத்தனையோ பேர் இப்படி என்னை ஏமாற்றிவிட்டார்கள்" என்றான். மதன் "தந்தையே! இதோ யான் எடுத்துச் சென்ற மாயமோதிரம்." எனக் கூறி அதனைக் காட்டினான். அரசன் மகனை அணைத்து முத்தமிட்டான். மருமகளை ஆசீர்வதித்தான். நண்பனை வரவேற்றான். மூவரும் அரண்மனையில் உல்லாசமாக வாழ்ந்து வந்தனர். மல்லிகை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். மதனைப் பாம்பு தீண்டும் நாளும் கிட்டியது.

குறித்த நாளில் மதனும் மல்லிகையும் படுத்திருந்த அறைக்குள் சென்றான் தேவன். எரிந்துகொண்டிருந்த விளக்கொளியினுதவியால் பாம்பு ஒன்று மதனை நோக்கிச் செல்வதைக் கண்டான். தன்

வாளினால் பாம்பை இரு துண்டாக்கினான். சத்தங்கேட்டு மதன் விழித்துப் பார்த்தான். தேவன் வாளுடன் நிற்பதைக் கண்டு பயந்தான். பாம்பு வெட்டப்பட்ட செய்தியை அவன் அறியவில்லை. அரசன் நடந்த விஷயத்தை அறிந்தான். தேவன் சிறை செய்யப்பட்டான். மதனும் மல்லிகையும் இருந்த அறைக்குள் வாளுடன் சென்ற குற்றத்திற்காக தேவனைக் கழுவேற்றும்படி கட்டளையிட்டான் அரசன்.

கவலைக்குமேல் கவலை கொண்ட தேவன் கழுவேறி இறப்பதிலும் உண்மையைக்கூறி தலை சிதறி உயிர் விடுவது நன்று என எண்ணினான். அரசன் ''தேவா! நீ கூற வேண்டியது ஏதும் இருந்தால் கூறலாம் என்றான். தேவன் தான் விஷயத்தைக் கூறி முடிந்ததும் தன் நிலை என்னவாகும் என்பதை முதலில் கூறிவிட்டு விஷயத்தைக் கூறினான். கூறி முடிந்ததும் தலை ஆயிரம் துண்டாக வெடித்து உயிர்விட்டான். உடனே அச்சபையில் ஒருத்தி தோன்றி தேவன் உயிர்பெற உபாயம் கூறினாள். அவள் வேறுயாருமல்ல மல்லிகைதான். ஒரு கையில் ஆண் குழந்தையுடனும் மறுகையில் வாளுடனும் தோன்றினான் மதன். தன் குழந்தையை இரு துண்டாக வெட்டி தேவனின் தலையில் இரத்தஞ் சிந்தவிட்டான். தேவன் உயிர் பெற்றெழுந்தான். தன்னை உயிர்ப்பித்த நன்றிக்காக மதனின் குழந்தையையும் முனிவரிடம் பெற்ற வரத்தால் உயிர்பெறச் செய்தான் தேவன். எல்லோரும் மதனையும், மல்லிகையையும், தேவனையும் வாழ்த்தினர். அரசன் தான் உண்மையை அறியாது செய்த பிழையைப் பொறுக்கும்படி தேவனை வேண்டினான்.


## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது.

(பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவி ரோடு, பம்பாய்-17.




## எப்படி வாழ்வது?

— முல்லையூர் மணி —

மலர்ந்து மணம் பரப்பவேண்டிய வேளையிலே விண்ணகம் புகுந்த ஒரே மகனின் பிரிவினால் ஏங்கித் தவிக்கும் அன்புத் தாயவள் இதயத்தின் ஓலம் இது.

நிலவே! நிலவே! நீ சொல்வாய்
நிம்மதி இல்லா மனதுடனே
உலகின் மடியில் உலவிடுதல்
ஒருவாழ் வாமோ நீ சொல்வாய்

இரவே! இரவே! நீ சொல்வாய்
இன்னல் இழைக்கும் இவ்வுலகில்
எரியும் எண்ணக் குமுறலுடன்
எப்படி வாழ்வது நீ சொல்வாய்

இறைவா! இறைவா! நீ சொல்வாய்
கறையே இல்லாக் காய்கள்தனை
மறைவாய்ப் பறிக்கும் உன் நிழலில்
மனிதன் எப்படி வாழ்வதுவோ?

கண்ணே இல்லாக் கல்நெஞ்சா!
கண்போல் வளர்த்த என்மகனை
மண்ணுள் நீஏன் புதைத்தனையோ
மணவினை காணும் வேளையிலே

தனக்கென வாழா வெண்மதியே!
தன் நலம் பேணாத் தண்மதியே!
எனக்கோர் உதவி செய்வாயோ
என்னரும் மகனைக் காட்டுவையோ?

[யாவும் கற்பனை]

## மடமை போக்க விரும்பாரோ?

கா. சிவயோகநாதன், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

உலகை விட்டு விலகும் போதும்
உண்மை சற்றுச் சொல்லாரோ - மெய்ப்
பண்பை விட்டுச் செல்லாரோ?
பயிரை வளர்க்கும் மனிதரெல்லாம்
பாசம் பார்த்து விளையாரோ - பொய்
நாசம் தீர்த்து ஒழியாரோ!

வெள்ளிக்கிழமை தன்னும் மனிதர்
விரும்பிக் கோயில் செல்லாரோ - ஓர்
வேளை தம்மை மறவாரோ?
கள்ளை விட்டுக் களவை விட்டு
கடவுள் பக்கம் திரும்பாரோ - தம்
மடமை போக்க விரும்பாரோ?

★★★

## அந்த நாள் வந்திடாதோ!

பொ. யோகராசா, மத்திய மகா வித்தியாலயம், வசாவிளான்.

1. மாசற்ற குழந்தை யுள்ளம்
மண்கறி சோற்றுப் பானை
பூசைக்கும் ஒளித்துச் சென்று
புளியங்காய் எறிந்த நாங்கள்
மேசைக்கு மேலே ஏறி
மீன்சட்டி திறந்த நெஞ்சு
ஆசைக்குப் பார்க்க ஓர்கால்
அந்த நாள் வந்திடாதோ!

2. ஓட்டுக்கு மேலே ஏறி
ஒட்டுமா பறித்த போது
வீட்டுக்குச் சொந்தக் காரன்
வெளியிலே வந்து பார்த்தான்
ஆட்டுக்கு மேலே பாய்ந்தேன்
அதுகயி றறுத்துப் பாய
மாட்டிக் கொண்டழுத நாளும்
மறுமுறை வந்திடாதோ

கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக்
களவாக இனிப்பும் வாங்கி
இடைக்கிடை தின்று வந்தேன்
இதைஐயா கண்டு கொண்டு
குடைக்கம்பி எடுத்த டிக்கக்
குறுக்கிட்டென் அம்மா கொஞ்சித்
துடைத்தென்னைத் தூக்கிச் சென்ற
அந்தநாள் தோன் றிடாதோ!

★★

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

25. செல்வி கு. கணேஸ்வரி, சிறும்பியடி,
அ. த. க. பாடசாலை, புத்தளம்.
26. செல்வி எம். பெனடிக்டா நந்தகுமாரி,
சென்ற்மேரீஸ் தமிழ் வித்தியாலயம், புத்தளம்.
27. எம். பி. மரியபுஷ்பம்,
சென்ற்மேரீஸ் தமிழ் வித்தியாலயம், புத்தளம்.
28. கே. கிருஷ்ணமூர்த்தி,
பட்டித்திடல், தோப்பூர்.

★★

## உங்களுக்குத் தெரியுமா?

1. எலியும், வெளவாலும் எத்தனை ஆண்டுகள் உயிர்வாழும்?
2. கங்காரு என்ற மிருகத்தின் குட்டி பிறக்கும்பொழுது எவ்வளவு நீளமிருக்கும்?
3. வேப்பமரம் பூக்கத் தொடங்கும் மாதம் எது?
4. தலையிலுள்ள உரோமங்களின் எண்ணிக்கை சராசரி எத்தனை இருக்கும்?
5. சூரியனின் விட்டம் என்ன?
6. புவி ஈர்ப்பு ஆற்றலைக் கண்டுபிடிக்கும்போது சர்ஐசக் நியூட்டனின் வயது என்ன?
7. நத்தைக்கு எத்தனைவரிசைப் பற்கள் உண்டு. வரிசை ஒன்றுக்கு எத்தனை பற்கள்?
8. எங்களுடைய மூளையின் சராசரி நிறை என்ன?
9. மிகவும் பெரிய நாடு எது?
10. யாழ்ப்பாண அரசர் உபயோகித்த கொடி எது?

(விடை அடுத்த இதழில்)

# கட்டுரைப் போட்டி

## நான் விரும்பும் ஈழத்துச் சிறுகதை நூல்

**முதலாம் பரிசு ரூபா 25-00**
**இரண்டாம் பரிசு ரூபா 10-00** } புத்தகப் பரிசு

இந்த இதழில் ஈழத்துச் சிறுகதை நூல்களின் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றைத் தேடி வாசித்து உங்களுக்குப் பிடித்த ஒரு சிறு கதை நூல்பற்றி

**"நான் விரும்பும் ஈழத்துச் சிறு கதை நூல்"**

என்ற தலைப்பில் விமர்சன ரீதியாக புல்ஸ்காப் கடதாசியில் 4 பக்கங்களுக்கு மேற்படாது எழுதி **15-10-68**க்கு முன் வெற்றிமணியில் வெளியிடப்படும் கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் இணைத்து

கட்டுரைப் போட்டி, வெற்றிமணி, முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்புக.

**சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசு கொடுக்கப்படும்.**

பரிசுக் கட்டுரைகள் வெற்றிமணியில் வெளியிடப்படும்.

---

## கட்டுரைப் போட்டி

பெயர்: ........................................ வயது: ..............

முகவரி: ........................................................

........................................................

அங்கத்தவர் இல: ..............................

சிறு கதை நூலின் பெயர்: ........................................

........................................

கையொப்பம்

# ஈழத்துச் சிறுகதை நூல்கள்.

32 ஈழத்துச் சிறுகதை நூல்களின் பெயர்கள் இங்கே தரப்படுகின்றன. பல எழுத்தாளர்களின் கதைகளைத் தொகுத்து வெளியிட்ட தொகுப்பு கதை நூல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. எமக்கு எழுதினுல் விலைவிபரம், இடைக்குமிடம் ஆகியவற்றை அறிவிக்கமுடியும்.

| | நூலின் பெயர்: | எழுதியவர் பெயர்: |
|---|---|---|
| 1. | அக்கா | அ. முத்துலிங்கம் |
| 2. | ஒரே இனம் | செ. கணேசலிங்கம் |
| 3. | சங்கமம் | செ. கணேசலிங்கம் |
| 4. | நல்லவன் | செ. கணேசலிங்கம் |
| 5. | நிலவும் நினைவும் | சிற்பி |
| 6. | கயமை மயக்கம் | வரதர் |
| 7. | கடவுளரும் மனிதரும் | பவானி |
| 8. | கன்னிப்பெண் | நகுலன் |
| 9. | குழந்தை ஒரு தெய்வம் | காவலூர் இராசதுரை |
| 10. | சாலையின் திருப்பம் | டொமினிக் ஜீவா |
| 11. | பாதுகை | டொமினிக் ஜீவா |
| 12. | தண்ணீரும் கண்ணீரும் | டொமினிக் ஜீவா |
| 13. | தோணி | வ. அ. இராசரத்தினம் |
| 14. | டானியல் கதைகள் | கே டானியெல் |
| 15. | தாம்பூல இராணி | அருள் செல்வநாயகம் |
| 16. | தாலி சிரித்தது | மலையமான் |
| 17. | தெய்வமகன் | நாவேந்தன் |
| 18. | வாழ்வு | நாவேந்தன் |
| 19. | நிறை நிலா | இ. நாகராஜன் |
| 20. | நிலவிலே பேசுவோம் | என். கே. ரகுநாதன் |
| 21. | பசி | மாதகல் செல்வா |
| 22. | புதுயுகம் பிறந்தது | மு. தளையசிங்கம் |
| 23. | மாலா நீ என்னை மறந்துவிடு | சீ. சிவஞானசுந்தரம் |
| 24. | மேடும் பள்ளமும் | நீர்வை பொன்னையன் |
| 25. | வீ | எஸ். பொன்னுத்துரை |
| 26. | வெண்சங்கு | இரசிகமணி கனக. செந்திநாதன் |
| 27. | வெள்ளரி வண்டி | பொ. சண்முகநாதன் |
| 28. | ஊர் நம்புமா | நந்தி |
| 29. | அமைதியின் இறகுகள் | செம்பியன் செல்வன் |
| 30. | யாழ்ப்பாணக் கதைகள் | கே. வி. நடராசன் |
| 31. | யோகநாதன் கதைகள் | யோகநாதன் |
| 32. | மோதல் | திமிலை மகாலிங்கம் |

# போட்டி விதிகள்

1. இப்போட்டிக்குப் பிரவேசக்கட்டணம் இல்லை. ஆனால் விடைகள் வெற்றிமணிக் கூப்பனிலேயே அனுப்பப்படல் வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம்.

2. சரியான விடை அல்லது கிட்டத்தட்டச் சரியான விடை அனுப்புகிறவர்களுக்குப் பரிசு கொடுக்கப்படும்.

3. ஐந்துபேருக்குமேல் பரிசுக்கு உரிமையுடையவர்கள் வரின் அதிஷ்டசீட்டின்மூலம் அவர்களுள் ஒருவர்தெரிவு செய்யப்படுவர்.

4. விடைகளைச் சக்தி அச்சகத்திலுள்ள வெற்றிமணிக் காரியாலயத்தில் முடிவு திகதிக்கு முன் நேரிலும் கொடுக்கலாம்.

5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

6. விடை அனுப்பவேண்டிய முகவரி: வெற்றிமணி — முள்ளியவளை

---

# பழைய வெற்றிமணி இதழ்கள்

1968 தை தொடக்கம் உள்ள பழைய இதழ்கள் தேவையென எழுதியுள்ளனர். சில பிரதிகள் மாத்திரம் உண்டு. தேவையானோர் இதழ் ஒன்றுக்கு 30 சத முத்திரைவீதம் அனுப்பிப் பெறவும்.


## வெற்றிமணி விற்பனையாளர்

**எம். ஏ. அசீஸ்**

பொத்துவில் கவிவாணன்
அறிவகம்
பொத்துவில்

# அறிவுப் போட்டி இல. 4.

## பரிசு ரூபா 10-00

முடிவு திகதி: 10-9-68 செவ்வாய்க்கிழமை

சரியான விடை 11-9-68 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு நேயர்கள் முன்னிலையில் சக்தி அச்சகத்தில் திறக்கப்படும். சரியான விடையும் பரிசுபெற்றோர் விபரமும் 15-9-68இல் வெளியிடப்படும்.

முற்றிலும் சரியான விடை அல்லது கிட்டத்தட்டச் சரியான விடை அனுப்புகிறவர்களுக்குப் பரிசு கொடுக்கப்படும். ஒருவருக்கோ பலருக்கோ ஆசிரியர் உசிதம் போலப் பரிசு கொடுக்கப்படும்.

பின்வரும் வினாக்களுக்கு விடைகளை கீழேயுள்ள பகுதியில் எழுதி அப்பகுதியை வெட்டி தபால் அட்டையில் ஒட்டி

அறிவுப்போட்டி இல. 4, வெற்றிமணி, முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்புக.

1. பெண்களுக்கு வாக்குரிமை இல்லாத நாடு எது?
2. குண்டலகேசி என்னும் நூலின் ஆசிரியர் யார்?
3. உலகில் நீளமான நதி எது?
4. பறவைகளுள் மிகப் பெரியது எது?
5. ''நீக்கோ'' நீர்வீழ்ச்சி எங்கே உண்டு?
6. தன் உடலளவு நீளம் நாக்கை நீட்டும் பிராணி எது?
7. சுவெஸ் கால்வாயை வெட்டியவர் யார்?
8. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்பதில் 16 பேறுகளும் எவை?

## அறிவுப்போட்டி இல. 4

1. ................................ 2. ................................

3. ................................ 4. ................................

5. ................................ 6. ................................

7. ................................ 8. ................................

................................................................

................................................................

பெயர்................................................................

விலாசம்................................................................

................................................................

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50 சதம் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். நேரிலும் கொடுக்கலாம். விண்ணப்பப்பத்திரம் தேவையானோர் எழுதுக.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

**அன்புள்ள மணி மாமாவுக்கு,**

வெற்றிமணி மாணவர் மன்றத்தில் என்னையும் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளவும். 50 சதம் அனுப்புகின்றேன்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலை முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .................. வயது .................. வகுப்பு ..................

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.............................. ..............................

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்


# பேனா நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர விரும்புகிறவர்கள் 50 சதம் அனுப்பவேண்டும்.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனால் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது Q.B.830

## QUALIFIED OPTICIANS



*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams :* **VASAOPTICO** *Telephone :* **2931**

---

கண்களுக்குத் தேவையான

## சகலவிதமான கண்ணாடிகளுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

**கொழும்பு. 11.**

தொலைபேசி: 2931

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-8-68 வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.